தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

—

சனிக்கிழமை, 1978 ஏப்ரல் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10–30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினா 235ஐ கடைசியில் எடுத்துக் கொள்ளலாம்.

Clerks of Aided High Schools.

*236 Q. THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Service Condition Committee appointed under the Chairmanship of Dr. M. D. Paul, Joint Director of School Education, has recommended to the Government, to sanction the Assistants' scale to clerks of Aided High Schools, having a student strength of 1,000 and above; and

(b) if so, the action taken thereon?

மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் எழுத்தர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆயிரமும், அதற்கு மேலும் மாணவர்கள் உள்ள மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் எழுத்தர்களுக்கு ''உதவியாளர்கள் சம்பள விகிதம்'' வழங்குமாறு, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் டாக்டர் எம். டி. பால் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட பணி நிலைமைகள் குறித்த குழு, அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இக்குழுவின் பரிந்துரையைப் பரிசீலித்து இதனை அமுலாக்கத் தேவையில்லை என அரசு கைவிட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் எழுத்தர்களுக்கு எந்தவிதப் பதவி உயர்வும் இல்லை. மேலும் அவர்களுக்குத் தேர்வுநிலை வழங்காத நிலையில், மீண்டும் இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு செய்து, ஒரு நல்ல முடிவை எடுக்க மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்; அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. க. அறிவழகன்: ஆயிரம் மாணவர்களுக்கு மேல் பயில்கின்ற பள்ளிகளிலே வேலை பார்க்கும் உதவியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கிடையே பணியாற்றுகிறார்கள். ஏனென்றால் தேவையான அளவுக்கு உதவியாளர்கள் அங்கேயில்லை. அந்த நிலையில் அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டால்தான், அவர்கள் ஊக்கத்தோடு பணியாற்ற முடியும். அது தவிர, ஊதியம் நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவிடம், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் சில பரிந்துரைகளை வழங்குவது வழக்கம். இயக்குநர், துணை இயக்குநர், மற்றும் பணியாளர்களுக்கு இவ்வளவு சம்பளம் வேண்டுமென்று பரிந்துரை வழங்குகிறார்கள். அதைப் பார்த்திருக்கிறேன். அப்போது ஆசிரியர்களுக்கு என்ன சம்பளம் வழங்க வேண்டுமென்று பரிந்துரை வழங்குவார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அது போன்ற பிரச்சினைகள் குறித்தும் பரிந்துரைகள் வழங்க அமைச்சரவர்கள் அவர்களைக் கேட்டுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மூன்றாவது சம்பளக் கமிஷன் முன்னால் அரசு பரிந்துரைகள் செய்வது எந்த அளவுக்கு இருந்தாலும், திருப்தி தர முடியாத நிலைமைதான் இருக்கும். சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் கோரிக்கைகளை அந்தக் குழுவின் முன்னால் வைப்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

B. Litt. Degree Course.

*237 Q. THIRU. A. R. DAMODARAN (on behalf of THIRU. G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) whether the Government have not recognized so far the B. Litt. Degree started in 1975-76, in Tamil Colleges which are affiliated to the University of Madras;

(b) if so, the reason therefor; and

(c) when the Government will recognize the same and sanction the grant?